**செய்தி வெளியீடு எண்: 91** **நாள்:05.02.2021**

## செய்தி வெளியீடு

## APEDA – மண்டல அலுவலகம் திறப்பு விழா

வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் "அபிடா" (APEDA) வேளாண் மற்றும் தோட்டக்கலை சார்ந்த பொருட்களின் ஏற்றுமதியினை ஊக்குவித்து மேம்படுத்தும் பணியினை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாட்டில் ஏற்றுமதி வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக்கொள்ளும் பொருட்டு, தமிழக அரசின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் மண்டல அலுவலகத்தினை தமிழ்நாட்டில் உருவாக்க தமிழ்நாடு அரசு தொடர்ந்து மத்திய அரசினை வலியுறுத்தி வந்ததையடுத்து, "அபிடா" அமைப்பின் மண்டல அலுவலகம் 04.02.2021 அன்று கிண்டி, திரு.வி.க தொழிற்பேட்டையில் இயங்கும் தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரிய வளாகத்தில், அபிடா அமைப்பின் தலைவர் Dr.M.அங்கமுத்து, இ.ஆ.ப., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இவ்விழாவில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் Dr. N. சுப்பையன் இ.ஆ.ப., வேளாண்மை துறை இணைச் செயலாளர் திரு.T. ஆனந்த், இ.ஆ.ப., வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை இயக்குநர் திரு.K.V. முரளிதரன், இ.ஆ.ப., அபிடா வாரிய உறுப்பினர் திரு.அன்புராஜ், APEDA செயலர் Dr. சுதான்சு மற்றும் துணை பொது மேலாளர் திரு.R. ரவீந்திரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

பல்வேறு வேளாண் மண்டலங்களை உள்ளடக்கிய நமது மாநிலத்தில் பல்வேறு வகையான பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் ஏறத்தாழ 70% மக்கள் வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த நடவடிக்கையில் ஈடுபட்டு மாநிலத்தின் பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்குகின்றனர்.

தமிழக அரசின் தொடர் முயற்சியினால் கடந்த ஐந்து ஆண்டுகளாக வேளாண்மை மற்றும் தோட்டக்கலையில் தமிழகம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. தமிழ்நாட்டில் நெல், நிலக்கடலை, சிறுதானியங்கள், பழங்கள், காய்கறிகள், நறுமணம் மற்றும் வாசனை பயிர்கள், தோட்டப்பயிர்கள், மலர்கள் மற்றும் மூலிகைப் பயிர்கள் பெருவாரியாக பயிரிடப்படுகின்றன.

தற்போது பாசுமதி அல்லாத இதர அரிசி வகைகள், காய்கறிகள், மாம்பழம் மற்றும் மாம்பழ கூழ், கொய் மலர்கள், உலர் மலர்கள், அப்பளம், கெர்கின்ஸ், கோழி இறைச்சி மற்றும் முட்டைகள் பெருமளவில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வரும் நிலையில் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் மண்டல அலுவலகம் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டதன் மூலம், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட பொருட்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புகள் நன்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அபீடா மண்டல அலுவலகம் பின்வரும் முகவரியில் இயங்கி வருகிறது.

**வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள்**
**ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைய மண்டல அலுவலகம்**
**இரண்டாம் தளம்,**
**வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையரக வளாகம்,**
**திரு.வி.க.தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–32.**
**மொபைல் எண்.99865 93017**

வேளாண்மை மற்றும் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியாளர்கள் மேற்கண்ட மண்டல அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு, உரிய உதவிகள் பெற்று பயன் அடையலாம்.

***

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**